2026 ஆகஸ்ட் மாதம் 07- ஆம் தேதி வெள்ளிக்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

O.S. நெம்பர் : 246/2021

2026-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 07- ஆம் தேதி வெள்ளிக்கிழமை 3ம் பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய பி.வா.சா.2-வது நபரின் வாக்குமூலம்

(1969-ஆம் ஆண்டின் 54-வது விதியின் 9-வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.டி.சுபத்ரா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | DW2 – பரமசிவம் |
| தந்தை பெயர்: | சமயணன் |
| ஊர்: | உத்தமபாளையம் |
| வட்டம்: | உத்தமபாளையம் |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | துணைவட்டாட்சியர், உத்தமபாளையம் மண்டலம் |
| வயது : | 38 |

07.08.2026

**(சாட்சி பணியாளர் அடையாள அட்டை மூலம் அடையாளம் காணப்பட்டார்). இ.ம.எண். 12/2026 மனு 07.08.2026ம் தேதி அனுமதிக்கப்பட்டு, சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.**

**முதல் விசாரணை**–

1. நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். உத்தமபாளையம் தாசில்தார் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க எனக்கு கொடுத்த அனுமதி கடிதம் **சா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அடங்கல் என்பது தமிழ்நாடு பட்டா பாஸ்புக் சட்டம் மற்றும் வருவாய்துறை நிலையாணை சட்டத்தின் அடிப்படையில் வழங்கப்படும் என்றால் சரிதான். அடங்கல் என்றால் என்ன என்றால் சொத்தில் யார் சாகுபடி செய்கிறார்களோ அவர்கள் குறித்த விபரத்தின் பட்டியல் ஆகும்.

2. ஒரு நிலத்தில் யார் சாகுபடி செய்கிறார்கள் என்று தாசில்தார் அலுவலகத்திலிருந்து விசாரணை செய்வார்களா அல்லது கிராம நிர்வாக

அலுவலர் அலுவலகத்திலிருந்து விசாரணை செய்வார்களா என்றால் கிராம நிர்வாக அலுவலர் விசாரணை செய்து கொடுக்கும் அறிக்கையின் அடிப்படையில் அடங்கல் பதிவேட்டில் கிராம நிர்வாக அலுவலர் பதிவு செய்வார். சொத்தின் சுவாதினத்தில் இருப்பவர் அடங்கல் கணக்கில் காட்டப்படுவார் என்றால் சரிதான். வருவாய்துறை நிலையாணை சட்டம் விதி 23 மற்றும் 31 (8) –ன்படி ஒரு சொத்தின் சுவாதீனம் சம்பந்தமாக தாவா இருக்கும்பட்சத்தில் தாசில்தார் அறிவிப்பு அனுப்பி விசாரணை செய்து, அதன்பின்னர் அடங்கல் கொடுக்க வேண்டும் என்றால் சரியல்ல, கிராம நிர்வாக அலுவலர் கொடுக்க வேண்டும்.

3. சுவாதீனத்தில் இல்லாதவர் பெயரில் அடங்கல் கணக்கு வழங்கப்படாது என்றால் சரிதான். தமிழ்நாடு பட்டா பாஸ்புக் சட்டம் பிரிவு 17–ன்படி தவறான தகவல் கொடுத்தால் குற்ற நடவடிக்கை எடுக்க இயலும் என்றால் சரிதான். ஒரு நபர் சுவாதீனத்தை மீட்க சொல்லி நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருக்கும்பட்சத்தில் கிராம நிர்வாக அலுவலர் வழக்கு தாக்கல் செய்த நபர் சுவாதீனத்தில் இருப்பதாக அடங்கல் கொடுக்க முடியுமா என்றால் முடியாது. ஒவ்வொரு ஆண்டும் கிராம நிர்வாக அலுவலர் யார் சுவாதீனத்தில் இருக்கிறார்கள் என்பதை விசாரணை செய்து அறிக்கை வழங்குவது வழக்கம் என்றால் சாகுபடி பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டும்.

4. சாகுபடி பதிவேட்டின் அடிப்படையில் சர்வே எண்கள்.1376/1, 1376/2, 1374/1, 1375 ஆகிய நிலங்களில் சுவாதீனத்தில் இருப்பதாக 2017 முதல் 2020 வரை அடங்கல் கணக்கு யார் பெயரில் வழங்கப்பட்டுள்ளது என்றால் கனிஷ்கர் பெயரில் வழங்கப்பட்டுள்ளது. மார்க்கையன்கோட்டை கிராமம் பட்டா எண்.1389, சர்வே எண்.422/3 உள்ள நிலத்திற்கு 2017 முதல் 2020 வரை அடங்கல் கணக்கு யார் பெயரில் வழங்கப்பட்டுள்ளது என்றால் கனிஷ்கர் பெயரில் வழங்கப்பட்டுள்ளது. நீதிமன்றத்தில் சுவாதீன மீட்பு வழக்கு நிலுவையில்

உள்ளபோது கிராம நிர்வாக அலுவலர் வாதி கனிஷ்கருக்கு ஆதரவாக அவரது பெயரில் அடங்கல் அ.சா.ஆ.8 மற்றும் அ.சா.ஆ.9 வழங்கியுள்ளார் என்றால் கிராம நிர்வாக அலுவலரின் புல தணிக்கை அறிக்கையின் அடிப்படையில் அ.சா.ஆ.8 மற்றும் அ.சா.ஆ.9 வழங்கப்பட்டுள்ளது.

5. சுவாதீனத்தில் இல்லாத நபருக்கு அடங்கல் கணக்கு கொடுத்ததால் தாசில்தார் சாட்சியம் அளிக்க வராமல் எனக்கு அனுமதி கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல, அடங்கல் பதிவேடு முழுக்க முழுக்க கிராம நிர்வாக அலுவலர் கொடுக்கும் அறிக்கையாகும். சுவாதீன மீட்பு வழக்கு நிலுவையில் இருக்கும்போது, வாதிக்கு அனுசரணையாக கிராம நிர்வாக அலுவலரும், உத்தமபாளையம் தாசில்தாரும் செயல்பட்டதால் அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க இயலும் என்றால் வட்டாட்சியருக்கும் அடங்கல் பதிவேட்டிற்கும் சம்பந்தமில்லை. அ.சா.ஆ.8 மற்றும் அ.சா.ஆ.9 அடங்கல் கணக்கு யார் எங்கள் அலுவலகத்தில் சான்றிட்ட கோரினார்கள் என்ற விபரம் உள்ளதா என்றால் கனிஷ்கர் என்பவர் 28.06.2022ம் தேதி உரிய அரசு சான்றிட்ட நகல் கோரி மனுத்தாக்கல் செய்த விபரம் நகல் வழங்கும் 2020-2025 பதிவேட்டில் வரிசை எண்.49, 50 பதிவாகியுள்ளது.

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

6. அடங்கல் என்றால் என்ன பயிர் விளைவித்தல், உரிமையாளர் யார், நிலத்தின் வகை, விஸ்தீரணம் ஆகிய விபரங்கள் அடங்கிய பதிவு ஆவணம் என்றால் சரிதான், அது கிராம கணக்கேடு 2 ஆகும். அடங்கல் என்பது சட்டப்படியான குத்தகைகாரர், அவரது வாரிசுதாரர்கள் பெயரில் வழங்கப்படும் என்றால் பட்டாதாரர் பெயரில் வழங்கப்படும் அல்லது குத்தகைகாரர் பெயரில் வழங்கப்படும். சட்டத்திற்கு விரோதமாக ஆக்கிரமிப்பு செய்திருந்தால் அடங்கல் வழங்கப்படுமா என்றால் இல்லை. தாவா சர்வே எண்.1376/1, 1376/2, 1374/1, 1375, 1376/2 ஆகிய நிலங்களுக்கு தனராஜன், ஜெயராஜ், கணேசன்

ஆகியோர்கள் பெயரில் அடங்கல் வழங்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. அடங்கலை மட்டும் வைத்துக்கொண்டு யார் அனுபவத்தில் உள்ளார்கள் என்று குறிப்பிட்டு சொல்ல முடியுமா என்றால் முடியாது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 07.08.2026 அன்று வெள்ளிக்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI
Digitally signed by G SREE DEVI
Date: 2026.08.07 18:30:53 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
07.08.2026.